நான் முதல்வன்

உலகை வெல்லும் இளைய தமிழகம்

# உயர்கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டி
# கருத்தாளர் கையேடு

**பள்ளிக்கல்வித்துறை**

**தமிழ்நாடு அரசு**

# உயர்கல்வி வழிகாட்டி

## 1. நம்மை நாம் புரிந்து கொள்ளுதல்

**பயிற்சியின் நோக்கங்கள்**

- தங்கள் நேரத்தை தங்கள் கையில் எடுப்பதன் அவசியம் பற்றி மாணவர்களை அரிய செய்தல் .
- மாணவர்கள் தங்கள் உணர்ச்சிகளை எவ்வாறு கையாளலாம் என்பது பற்றி சொல்லிக் கொடுத்தல் .
- வாழ்வில் நெருங்கிய உறவில் உள்ள பெற்றோர், நண்பர், மற்ற பெரியவர்களுடன் உறவுகளை எப்படி பேணுவது என்பது பற்றி தெரியப்படுத்தல் .

**செயல்படுத்தும் முறை:**

கீழ்க்கண்ட அறிமுகத்தோடு பயிற்சியை தொடங்கலாம் .

நம் கனவுகளை நனவாக்கிக் கொள்ள முதலில் அடிப்படையில் தேவைப்படுவது நம்மை நாம் உணர்வதுதான். நம்மை நாம் உணர்வது என்பதை இரண்டுவிதமாகப் பார்க்கலாம்.

- ஒன்று, நாம் தற்போது என்னவாக இருக்கிறோம் என்பதைத் தெரிந்துகொள்வது
- இரண்டு, இலக்கு நோக்கிய பயணத்திற்கு நம்மை நாம் எப்படிச் செதுக்கிக்கொள்ளப் போகிறோம் என்பதைத் திட்டமிடுவது

இதற்கு **SWOC முறையைக் கையாளலாம் என்று சொல்லி உதாரணங்கள் கொடுத்து விளக்கவும் .**

S - Strength - என்னுடைய பலங்கள்

W - Weakness - என்னுடைய பலவீனங்கள்

O - Opportunities - எனக்கு இருக்கக்கூடிய வாய்ப்புகள்

C - Challenges – என் முன்னால் இருக்கும் சவால்கள்

**பிறகு வாழ்க்கையைக் கையில் எடுக்கத் தேவைப்படும் அம்சங்கள் பற்றி செயல்தாள்கள் மூலம் விளக்கவும்.**

1. **நம் நேரம் மீதான நம் கட்டுப்பாடு**

செயல்தாள் –1 நேரத்தை வெற்றிகொள் – 24 மணி நேர அட்டவணையை விளக்கி பயிற்சி செய்ய ஊக்குவிக்கவும்

2. **உணர்வுகளைப் புரிந்துகொள்ளுதல்**

செயல்தாள் – 2 உணர்வுகள் பற்றி புரிந்து கொள்ளுதல்.

செயல்தாள் – 3 எதிர்மறை உணர்வுகளில் இருந்து விடுபடுவது எப்படி?

செயல்தாள் – 4 சந்திப்போமா? – மற்றவர் வாழ்வு பற்றி அறிதல்

3. **உறவுகளைத் தக்கவைத்துக் கொள்வது**

ஒருவரை ஒருவர் குறை கூறாமல், அதிகாரத் தோரணையில் பேசாமல், தான் உணர்வதை வெளிப்படுத்துவது பற்றியும், காதுகொடுத்துக் கேட்பதன் அவசியம் பற்றியும், பிறர் நிலையில் நின்று புரிந்துகொள்வது பற்றியும் தெரிந்து கொள்வார்கள்.

**ஆசிரியர்களுக்கான குறிப்புகள்**

- மாணவர்களுக்கு இந்த அமர்வினை விளக்குவதற்கு முன், ஆசிரியர்களும் இந்தச் செயல்தாள்களைச் செய்து பார்ப்பது நல்லது.
- பயிற்சி செய்து பார்க்கும்போது, நமக்கும் சில சந்தேகங்கள் வரக்கூடும். ஆழ்ந்து உள்வாங்கி, சிந்தித்துத் தெளிவு பெற்றால்தான் இந்தப் பயிற்சியை செய்ய மாணவர்களுக்கு உதவ முடியும்.

இறுதியாக கீழ்க்கண்ட கருத்துகளை திரும்ப ஒருமுறை வலியுறுத்தலாம்

**தன்னைத்தான் அறிதல் என்பது,**

- நம் பலம், பலவீனம், வாய்ப்புகள், சவால்கள் பற்றி அறிவது.
- நம்மை நாம் சரியாக வடிவமைத்துக் கொள்வதன்மூலம், நம் நேரத்தை, நம் உணர்வுகளைச் சரியாகக் கையாள்வது.
- பெற்றோருடன்/ பெரியவர்களுடன் இணைந்து நம் கனவுகளை நிறைவேற்றும் செயல் உத்திகளைப் பயன்படுத்துவது.

**எதிர்பார்க்கப்படும் விளைவுகள் :**

- தங்களுடைய நேரத்தை எப்படி ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்தலாம் என்பதையும், தங்களுடைய உணர்வுகள் பற்றியும் எதிர்மறை உணர்வுகளை சரிசெய்து கொள்வது பற்றியும் அறிந்து கொள்வார்கள் .
- பிறருடன் கலந்து பழகும் திறன் பற்றி பயிற்சி மூலம் அறிந்து கொள்வார்கள் .

# 2. உயர்கல்விப் படிப்புகளைப் புரிந்துகொள்ளுதல்

**கற்றல் நோக்கங்கள்:**

- 12ஆம் வகுப்புக்குப் பிறகு என்ன படிக்கலாம் என்பது பற்றிய தகவல்களை மாணவர்களுக்கு அளித்தல்.
- நுழைவுத் தேர்வுகள் தொடர்பான விவரங்களைப் பகிர்தல்
- மாணவர்கள் தங்களது விருப்பத்துக்கும் திறனுக்கும் ஏற்ற படிப்பைத் தேர்வு செய்வது குறித்து விளக்குதல்
- மாணவர் சேர்க்கை குறித்தும், கல்வி உதவித் தொகை குறித்தும் விவரங்களை திரட்டக் கற்றுத் தருதல் .

**செயல்படுத்தும் முறை:**

கீழ்கண்ட அறிமுகத்தோடு பயிற்சியை தொடங்கலாம். பள்ளிக்கல்வியை முடித்த மாணவர்கள், அனைவரும் உயர்கல்வியைப் பெறும் வகையில் கட்டமைப்புகள் தமிழ்நாட்டில் பரவலாக உள்ளன என்று கூறி **உயர்கல்வி, வேலைவாய்ப்பு** வழிகாட்டியில் உள்ள அனைத்துத் தகவல்களையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**உயர்கல்விப் படிப்பைத் தேர்வுசெய்வது எப்படி?**

- விருப்பத்துக்கும் திறமைக்கும் ஏற்ற துறை, குடும்பச்சூழ்நிலை
- படிப்புக்கான தகுதிகள், மாணவர் சேர்க்கைமுறை.

**செயல்தாள் – 1 'தெரிந்துக் கொள்வோமா'** என்பதின் மூலம் நமது தமிழகத்தில் உள்ள முக்கியப் பல்கலைக்கழகங்கள் பற்றி விளக்குங்கள் .

- தமிழ்நாடில் உள்ள அரசு பல்கலைக்கழகங்கள் –21
- தமிழ்நாட்டில் ஒன்றிய அரசின் க்கிய கல்வி நிறுவனங்கள் –12

(இது தவிர, பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்ட அரசுக் கல்லூரிகள் கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகள், தன்னாட்சிக் கல்லூரிகள், சுயநிதிக் கல்லூரிகள் உள்ளன.)

**அடுத்ததாக நுழைவுத் தேர்வுகள் பற்றிய குறிப்புகளை பகிர்ந்து கொள்ளுங்கள்**

தமிழ்நாட்டில் கலை, அறிவியல். பொறியியல், வேளாண்மை, துணைமருத்துவம், மீன்வளம் மற்றும் கால்நடை கல்லூரிகளில் சேருவதற்கு

நுழைவுத்தேர்வு தேவையில்லை. 12ஆம் வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்.

பொறியியல் படிப்புகளில் பி.ஆர்க் படிப்பதற்கும், மருத்துவப் படிப்புகளில் சேருவதற்கும் அகில இந்திய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு கல்வி நிறுவனங்களில் சேருவதற்கும் தனியே நுழைவுத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. குறிப்பிட்ட படிப்புகளில் சேர வேண்டும் என்று நினைக்கும் பல மாணவர்கள், அதற்கான நுழைவுத் தேர்வுகளுக்கு முன்னதாகவே திட்டமிட்டுத் தயாராக வேண்டும் என்று சொல்லுங்கள்.

**அகில இந்திய நுழைவுத் தேர்வுகள் All India Entrance Examinations**

**அறிவியல் படிப்புகள் (Science Courses)**

- பிஎஸ்சி ஆனர்ஸ் நுழைவுத் தேர்வு (B.Sc., (Hons) Entrance Examination)
- நெஸ்ட் நுழைவுத் தேர்வு
- பி.எஸ். படிக்க நுழைவுத் தேர்வு (Bachelor of Science Entrance Test)
- 5 ஆண்டு டியூயல் டிகிரி திறனறித் தேர்வு
- புள்ளியியல் படிப்பு நுழைவுத் தேர்வு ISI Admission Test
- நாட்டிக்கல் சயின்ஸ் நுழைவுத் தேர்வு Nautical Science Entrance Test

**மருத்துவப் படிப்புகள் Medical courses**

- நீட் நுழைவுத் தேர்வு **National Eligibility Cum Entrance Test –** NEET (UG)

**பொறியியல் படிப்புகள் Engineering Courses**

- ஜே இ இ நுழைவுத் தேர்வு – மெயின்
- ஜே இ இ நுழைவுத் தேர்வு – அட்வான்ஸ்ட்
- பிட்சாட் நுழைவுத் தேர்வு BITS Admission Test – BITSAT
- பிஆர்க் படிப்பில் சேர நுழைவுத் தேர்வு National Aptitude Test in Architecture – NATA
- மெரைன் என்ஜினீயரிங் பொது நுழைவுத் தேர்வு Common Entrance Test – CET
- பெட்ரோலிய தொழில்நுட்பப் படிப்பு நுழைவுத் தேர்வு Engineering Aptitude Test – UPESEAT

**தொழில் படிப்புகள் Professional courses**

- டிசைன் படிப்பு நுழைவுத் தேர்வு Design Aptitude Test - DAT
- ஐஐடியில் டிசைன் படிப்பு நுழைவுத் தேர்வு
- Undergraduate Common Entrance Examination - UCEED
- ஃபேஷன் டிசைன் படிப்பு நுழைவுத் தேர்வு NIFT – Ability Test
- சட்டப் படிப்புப் பொது நுழைவுத் தேர்வு Common Law Admission Test - CLAT
- ஹோட்டல் மேனேஜ்மெண்ட் படிப்பு நுழைவுத் தேர்வு Hotel Management Entrance Test - JEE
- காலணி வடிவமைப்புப் படிப்பு நுழைவுத் தேர்வு All India Selection Test - AIST
- வேளாண் படிப்புகளில் சேர அகில இந்திய நுழைவுத் தேர்வு All India Entrance Examination for Admission – AIEEA (UG)

**கலைப்புலப் படிப்புகள் (Courses in Humanities)**

- மேனேஜ்மெண்ட் படிப்பில் சேர திறனறித் தேர்வு Aptitude Test
- மத்தியப் பல்கலைக்கழகங்களில் சேர பொது நுழைவுத் தேர்வு Central Universities Common Entrance Test - CUCET
- கல்வியியல் படிப்பு பொது நுழைவுத் தேர்வு Common Entrance Test - CET
- சமூக அறிவியல் படிப்பு நுழைவுத் தேர்வு TISS Bachelor's Admission Test – TISS - BAT
- ரயில்வே துறை படிப்பு நுழைவுத் தேர்வு Admission Aptitude Test

**பாதுகாப்புப் படை Defence**

- தேசியப் பாதுகாப்பு அகாதமி நுழைவுத்தேர்வு (National Defence Academy Examination)
- கடற்படையில் பி.டெக். படிக்க நுழைவுத் தேர்வு Indian Navy B.Tech Admission Test

**நுழைவுத் தேர்வுகள் குறித்த தகவல்களுக்கு 'நான் முதல்வன்' இணையதளத்தைப் பார்க்க சொல்லவும் .**

பள்ளிப் படிப்பிற்கு பிறகு உயர்கல்வி படிப்பதற்கான வாய்ப்புகள், எந்தப் படிப்பைப் படித்தால் எந்த வேலைக்குப் முடியும், எந்த வேலைக்கு போவதற்கு எந்தப் படிப்புகளில் சேர வேண்டும் என்பது குறித்த விவரங்களை மாணவர்களுக்குத் தெரிவித்து அவர்களுக்கு வழிகாட்டுவதற்கான பள்ளிக் கல்வித்துறை தொடங்கியுள்ள '**நான் முதல்வன்**' என்ற வழிகாட்டி இணைய தளத்தை பற்றி விளக்குங்கள் .

**அனைவரையும் உள்ளடக்கிய உயர்கல்வி:**

கற்றல் குறைபாடுள்ள மாணவர்களும் சிறப்புக் கவனம் தேவைப்படும் மாணவர்களும் பிற மாணவர்களுடன் ஒரே பள்ளியில் சேர்ந்து கல்வியைப் பெறுவதற்கான இணக்கமான சூழ்நிலையை ஏற்படுத்தும் ஓர் அறிவியல் பூர்வமான அணுகுமுறையே உள்ளடக்கிய கல்வி என்று அது தொடர்பான தகவல்களையும் பகிருங்கள் .

**கல்வி உதவித் தொகை**

- மாற்றுத் திறனாளிகளுக்கான கல்வி உதவித் தொகை
- ஒன்றிய அரசு உதவித் தொகை!
- உயர்கல்விக்கு உதவும் அரசுத் திட்டங்கள்
- கல்வி உதவித் தொகை
- என்ஜியரிங் மாணவிகளுக்கு பிரகதி கல்வி உதவித் தொகை!
- +2 படித்த மாணவர்கள் கல்லூரியில் படிக்க கல்வி உதவித் தொகை!
- அறிவியல் மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை!
- அறிவியல் பட்ட மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை!
- தொழிலாளர் குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகை!

அரசு வழங்கும் உதவித் தொகை மட்டுமல்லாது, தொண்டு நிறுவனங்கள் வழங்கும் உதவித் தொகை குறித்த விவரங்களும் பெரிய தொழில் நிறுவனங்களின் சமூகநல பொறுப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவிகளும் மாணவர்களுக்குக் கிடைப்பதற்கான தகவல்களை வழங்கி வழிகாட்டுவதில் '**நான் முதல்வன்**' இணையதளம் உதவியாக இருக்கும் என்று சொல்லுங்கள் .

**ஆசிரியர்களுக்கான குறிப்புகள்**

- உயர் கல்வியில் உள்ள பல்வேறு படிப்புகள், அவற்றை வழங்கும் கல்வி நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை எப்படி திரட்டுவது என்பது பற்றி ஆசிரியர்களுக்கு தெரிந்திருத்தல் அவசியம்
- மாணவர்கள் சேர விரும்பும் கல்லூரி தொடர்பாகவும் படிப்புகள் தொடர்பாகவும் மாணவர்கள் கேட்கும் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கத் தயாராக இருக்க வேண்டும்.
- உயர்கல்விக்கான விவரங்களை சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களிலும் பள்ளிக் கல்வித் துறையின் இணையத்திலும் பார்த்துத் தகவல்களை எப்படி தெரிந்து கொள்வது என்பதைக் கற்றுத்தர வேண்டும்.
- மாணவர் சேர்க்கை, நுழைவுத் தேர்வு குறித்து ஊடகங்களிலும் இணைய தளங்களிலும் வரும் அறிவிப்புகள் குறித்து மாணவர்களுக்குத் தெரிவித்து விரும்பும் மாணவர்களை விண்ணப்பிக்கச் செய்ய வேண்டும் .
- நுழைவுத்தேர்வை எதிர்கொள்வது பற்றி மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். அரசு, தனியார், அறநிறுவனங்கள் வழங்கும் கல்வி உதவித் தொகை குறித்த விவரங்களை மாணவர்களுடன் பகிர வேண்டும்.

உயர்கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டியில் உள்ள செயல்தாள்களை பயிற்சி செய்வதன் மூலம் தகவல்களைத் திரட்டுவதற்கான பயிற்சியை கொடுங்கள் .

**செயல்தாள் – 2 நான் விரும்பும் உயர்கல்வி** தனக்கு விருப்பமான உயர்கல்வி என்ன என்பதை கண்டறிந்து, அதற்கான தகவல்களைச் சேகரித்தல்.

**செயல்தாள் – 3. என் மாவட்டம்......என் கல்லூரி**. நம் பகுதியைச் சேர்ந்த கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் பற்றிய விவரங்களை திரட்டுதல்

**எதிர்பார்க்கப்படும் விளைவுகள் :**

- 12ஆம் வகுப்புக்குப் பிறகு என்ன படிக்கலாம் என்பது பற்றிய தகவல்களைத் திரட்டக் கற்றிருப்பார்கள்
- நுழைவுத் தேர்வுகள் தொடர்பான விவரங்களைத் தெரிந்திருப்பார்கள்
- மாணவர் சேர்க்கை குறித்தும், கல்வி உதவித் தொகை குறித்தும் விவரங்களை திரட்டுவதற்குக் கற்றிருப்பார்கள்.

# 3. மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டிய திறன்கள்

**பயிற்சியின் நோக்கம்** :

- பாடங்களை படிப்பது, ஒரு வேலையில் அமர்வது, நன்கு சம்பாதிப்பது மட்டுமே வாழ்க்கை அல்ல என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்துதல்.
- சிறந்த மனிதராக வாழத் திறன்களும், பண்புகளும் முக்கியம் என்பதைப் புரிய வைத்தல்.

**செயல்படுத்தும் முறை:**

கீழ்க்கண்ட அறிமுகத்தோடு பயிற்சியைத் தொடங்கலாம் .

நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் பயனுள்ள முறையில் ஆக்கபூர்வமான வாழ்க்கையில் மேம்படுத்திக் கொள்ள படிப்பு தவிர பல்வேறு திறன்கள் தேவைப்படுகின்றன என்பது பற்றி மாணவர்களுக்கு விளக்க வேண்டும்.

திறன் மேம்பாடு நமக்குத் தன்னம்பிக்கையை தரும், நம் சுய மதிப்பீட்டை வளர்க்கும் . பல்வேறு சவால்களை கையாள உதவும் என்று சொல்லுங்கள் . பல்வேறு செயல்பாடுகளின் தேவைகளை உணர்ந்து அவற்றை பயிற்சி செய்து திறன்களாக மாற்றிக் கொண்டால் வாழ்க்கை பயணத்தின் பாதை வெற்றி பாதையாகும் என்று கீழ்க்கண்ட திறன்கள் பற்றி விளக்கிக் கூறுங்கள்.

1. கல்வி தொடர்பான திறன்கள்
2. உறவாடுவதற்கும் உரையாடுவதற்குமான திறன்கள்
3. உரையாடல் திறன்
4. கலாச்சார திறன்கள்.
5. பொழுதுபோக்கு திறன்கள்.
6. விளையாட்டு திறன்கள்
7. உணர்வுகளுக்கு ஈடு கொடுக்கும் திறன்

திறன் என்பது செயல்களோடு மட்டும் நிற்பதில்லை. ஆளுமைத் திறனுக்கு பண்புகளும் தேவை. பள்ளிப் பருவத்திலேயே பல்வேறு ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொண்டால் தான் பின்னாளில் உயர்கல்வி படிக்கும் போதும், வேலை பார்க்கும்போதும், நாம் ஆளுமை நிறைந்தவராகச் செயலாற்ற முடியும் என்று சொல்லுங்கள்.

**ஆசிரியர்களுக்கான குறிப்புகள்:**

- திறன்களை மேம்படுத்திக் கொள்வது பற்றி ஒருமுறை சொல்வதை கேட்டு மாணவர்கள் அவற்றைப் பற்றி உடனே சிந்திக்க ஆரம்பித்து விட மாட்டார்கள். இதற்கு செயல்தாள்களை பயன்படுத்தலாம்
- மாணவர்களிடம் தொடர்ந்து திறன்களை வளர்த்துக் கொள்வதன் அவசியம் பற்றி பொறுமையாக, குறை சொல்லாமல் வலியுறுத்தவேண்டும்.

**எதிர்பார்க்கப்படும் விளைவு :**

- சிறந்த மனிதராக வாழ கல்வியறிவு தவிர, திறன்களும் குணங்களும் முக்கியம் என்பதை மாணவர்கள் புரிந்து கொள்வார்கள் .

## 4. உயர்கல்வியில் சேருவதற்கான முன்தயாரிப்புகள்

**பயிற்சியின் நோக்கம்** :

1. உயர்கல்விப் படிப்பைத் தேர்ந்தெடுப்பதற்கு முன், தகவல்களைத் திரட்டுவதன் அவசியம் குறித்து மாணவர்களை உணரச் செய்தல்.
2. பள்ளிகளில் இருந்து உயர் வகுப்புகளுக்கு போவதற்கு முன் நாம் சேகரிக்க வேண்டிய சான்றிதழ்கள் பற்றி தெரிவித்தல் .

**செயல்படுத்தும் முறை:**

உயர்கல்வியில் சேர விரும்பும் மாணவர்களிடம் கீழ்க்கண்ட விஷயங்கள் பற்றி முன் கூட்டியே தெரிந்து கொள்ள வேண்டும் என்று கூறுங்கள்.

- மாணவர்கள் எந்தப் படிப்பில் சேர விரும்புகிறார்களோ, அந்தப் படிப்பில் சேருவதற்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் உள்ளிட்ட தகுதிகள் எவை என்பதைத் தெரிந்துகொண்டு, அந்தத் தகுதிகள் அவர்களிடம் இருக்கிறதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவேண்டும்.
- மாணவர்கள், தாங்கள் சேர விரும்பும் கல்லூரியில் சேருவதற்கு விண்ணப்பங்கள் எப்போது தருகிறார்கள்? விண்ணப்பிப்பதற்கான இறுதி நாள் போன்ற விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்.
- மாணவர்கள், தாங்கள் சேரவிரும்பும் கல்லூரியைப் பற்றி நன்கு தெரிந்துகொள்வதற்கு, முடிந்தால் அக்கல்லூரிக்கு நேரில் சென்று பார்ப்பதுடன், அக்கல்லூரியில் ஏற்கெனவே படித்துவரும் மாணவர்களிடம் தமது ஐயங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் சேர விரும்பும் கல்லூரியின் நிறை, குறைகள் தெரியவரும். பத்திரிகை விளம்பரங்களை மட்டும் வைத்து முடிவுக்கு வரக் கூடாது.

**உயர் கல்விக்கு விண்ணப்பிக்கும் போது மாணவர்கள் வைத்திருக்க வேண்டிய முக்கிய சான்றிதழ்கள்**

1. பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் (Mark Sheet)
2. பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் (Mark Sheet)
3. மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate)
4. சாதிச் சான்றிதழ் (Community Certificate)
5. ஆதார் அடையாள அட்டை (Aadhar card)
6. வருமானச் சான்றிதழ் (Income Certificate)

7. விளையாட்டுச் சான்றிதழ்கள் (Sports Certificates)
8. இருப்பிடச் சான்றிதழ் (Nativity Certificate)
9. முன்னாள் ராணுவத்தினரின் வாரிசுச் சான்றிதழ் (if applicable)
10. இலங்கைத் தமிழ் அகதி என்பதற்கான சான்றிதழ் (if applicable)
11. முதல் தலைமுறைப் பட்டதாரிச் சான்றிதழ் (if applicable)
12. மாற்றுத்திறனாளி என்பதற்கான சான்றிதழ் (if applicable)

**கல்விக்கடன்**

கல்லூரியில் மாணவர் சேர்க்கை பெற்ற பிறகே கல்விக்கடன் பெறுவதற்கு வங்கிகளில் விண்ணப்பிக்க முடியும். ஆனால், அதற்குத் தேவையான ஆவணங்களை முன்னதாகத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கல்விக்கடன் பெறுவதற்கு வித்யாலட்சுமி இணையத்தளத்தின் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். இதற்கு, வங்கிக்கணக்கு, பான்கார்டு (PanCard), ஆதார் கார்டு (AadharCard), வருமானச் சான்றிதழ் (Income Certificate) உள்ளிட்டவை தேவைப்படும் என்று சொல்லுங்கள்.

**ஆசிரியர்களுக்கான குறிப்புகள்:**

- வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களையும் உயர்கல்வி தொடர்பான தகவல்களைத் திரட்ட ஊக்குவிப்பதோடு, அதைப் பகிர வேண்டியதன் அவசியத்தை பற்றியும் எடுத்துச் சொல்ல வேண்டும்.
- சான்றிதழ்களைப் பெறுவதில் மாணவர்களுக்கு பிரச்சினைகள் இருந்தால், தகுந்த முறையில் வழி நடத்த வேண்டும்.
- கல்விக் கடன்களை பெற எந்த வங்கிகளில் போய், யாரை எப்படி பார்ப்பது, தேவைப்படும் ஆவணங்கள் என்ன அவற்றை எப்படி திரட்டுவது என்பது பற்றி மாணவர்களை வழி நடத்த வேண்டும்.

**எதிர்பார்க்கப்படும் விளைவுகள் :**

- உயர் கல்வி படிப்பை தேர்ந்தெடுப்பதற்கு முன், தகவல்களை திரட்டுவதன் அவசியத்தை மாணவர்கள் உணர்ந்திருப்பார்கள்.
- உயர் கல்விக்கு விண்ணப்பிக்கும் போது வைத்திருக்க வேண்டிய முக்கிய சான்றிதழ்கள் பற்றிய விவரங்களை பெற்றிருப்பார்கள்.

## 5. அச்சம் தவிர்!

**பயிற்சியின் நோக்கங்கள்** :

- தேர்வு நேரங்களில் பதற்றப்பட வேண்டியதில்லை என்பதை எடுத்துரைத்து மாணவர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டுதல்
- தேர்வு நேரங்களில் எப்படிப் படிக்க வேண்டும் என்பதை மாணவர்களுக்குப் புரிய வைத்தல்.
- தேர்வு அறையில் தேர்வு எழுதும்போது, எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்து விளக்கிக் கூறுதல்

**செயல்படுத்தும் முறை:**

- தேர்வு பற்றிய அச்சங்களை மனதில் வைத்துக் கொண்டு நிம்மதியாக படிக்க முடியாது. தேர்வுக்குத் தயாராவது குறித்த சின்னச் சின்ன யோசனைகளை பின்பற்றினால் அச்சத்தைப் போக்கி வாகை சூடலாம் என்று கூறுங்கள்.
- உயர்கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டியில் கொடுக்கப்பட்டுள்ள யோசனைகளை மாணவர்களிடம் பகிருங்கள்.
- அடுத்ததாக வெற்றிகரமாகத் தேர்வை எதிர்கொள்வது எப்படி என்பது பற்றிய செய்திகளையும் உயர் கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டியில் கொடுக்கப்பட்டுள்ளபடி பகிருங்கள்

**ஆசிரியர்களுக்கான குறிப்புகள்**:

- பயிற்சிக்கு முன்னதாக ஆசிரியர்கள், உயர்கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டியை நன்கு படித்திருக்க வேண்டும் .
- தேர்வைக் கண்டு பயப்படாமல், எந்தப் பதற்றமும் இல்லாமல் தேர்வை அணுகுவது எப்படி என்பதை மாணவர்களுக்குக் கற்றுத்தர வேண்டும்.
- தேர்வு நேரங்களில் உடல் நலத்தை பேணுவதன் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.
- விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் வெற்றி நிச்சயம் என்பதை எடுத்துக்கூறி மாணவர்களை உற்சாகப்படுத்த வேண்டும்
- தேர்வு அறை நடைமுறைகளை, அதற்கான காரணங்களுடன் மாணவர்களுக்கு விளக்கிக் கூறி புரிய வைக்க வேண்டும்.

**எதிர்பார்க்கப்படும் விளைவுகள்**

- தேர்வு நேரங்களில் எப்படிப் படிக்க வேண்டும் என்பது பற்றி மாணவர்களுக்குப் புரிய வரும் .
- தேர்வு அறையில் தேர்வு எழுதும்போது, எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி அறிந்து கொள்வார்கள் .

# 6. உயர்கல்விப் படிக்கட்டுகள்

**பயிற்சியின் நோக்கம்** :

- படிப்பதற்கான ஆர்வமும் சூழலும் இருப்பவர்களுக்கு உயர்கல்வியில் உள்ள அடுத்தடுத்த நிலைகளை விளக்குதல்.
- வேலையில் சேரவும், சேர்ந்த பிறகும்கூட, தொழில் சார்ந்த திறன் வழங்கும் படிப்புகளைப் படிப்பது வேலைத்தகுதியை உயர்த்தும் என்பதை அறியச் செய்தல்.

**செயல்படுத்தும் முறை:**

மேல்நிலைப் பள்ளிகளில் 12ஆம் வகுப்பை படித்து முடித்தபிறகு, கல்லூரிகளில் சேர்ந்து இளநிலைப் பட்டப் படிப்பைப் படித்து ஏதாவது பட்டம் பெற்றதோடு படிப்பு நின்றுவிடுவதில்லை. படிப்பு என்பது தொடர்ச்சியானது என்பதை மாணவர்களுக்கு விளக்க வேண்டும் .

- இளநிலைப் பட்டப்படிப்பை முடித்தவர்கள், முதுநிலைப் பட்டப்படிப்பில் அல்லது முதுநிலைப் பட்டயப்படிப்பில் சேரலாம்.
- நீங்கள் விரும்பும் வேலையில் சேருவதற்கு ஏற்ற வகையில் பி.எட், பி.எல் போன்ற மற்றொரு இளநிலைப் படிப்புகளில் சேரலாம்.
- முதுநிலைப் பட்டப்படிப்பை முடித்தவர்கள், எம்.பில் படிப்பிலோ அல்லது பிஎச்.டி ஆய்வுப் படிப்பிலோ சேரலாம்.
- பிஎச்.டி ஆய்வை முடித்து வேலையில் சேர்ந்தவர்கள், முதுமுனைவர் பட்டத்துக்காக ஆய்வில் ஈடுபடலாம் .
- டிப்ளமோ படித்தவர்கள், பட்டப் படிப்புகளில் சேர்ந்து தங்களது தகுதியை உயர்த்திக் கொள்ளலாம்.
- முதுநிலை பட்டயப் (Diploma) படிப்பில் சேரலாம். தொழில் திறன் பயிற்சிகளையும் பெறலாம்.
- உடனடியாக வேலைக்குப் போக வேண்டிய சூழலில் இருப்பவர்கள் வேலை பார்த்துக் கொண்டே படிப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதையும் குறிப்பிடுங்கள்.
- கல்லூரிகளில் விரிவுரையாளராக ஆவதற்கு ஆய்வுப்படிப்பை மேற்கொள்ள வேண்டும். அரசுக் கல்வி நிறுவனங்களில் முதுநிலைப்

பட்டப்படிப்புகளுக்குக் கட்டணம் குறைவு. கல்வி உதவித் தொகை வாய்ப்புகளும் உண்டு என்ற தகவல்களையும் பகிர்ந்து கொள்ளுங்கள் .

**முதுநிலைப் படிப்புகளில் சேருவதற்கான நுழைவுத்தேர்வுகள்–**

- தமிழ்நாடு பொது நுழைவுத் தேர்வு (Tamil Nadu Common Entrance Test - TANCET)
- கேட் தேர்வு (Graduate Aptitude Test in Engineering - GATE)
- பொது நுழைவுத் தேர்வு – கேட் ( Common Admission Test - CAT)
- முதுநிலை நீட் நுழைவுத் தேர்வு (National Eligibility– cum– Entrance Test –NEET PG )
- மேட் நுழைவுத்தேர்வு (Management Aptitude Test – MAT )
- சிமேட் பொது நுழைவுத் தேர்வு (Common Management Admission Test - CMAT)
- முதுநிலை சட்டப் படிப்பில் சேருவதற்கான பொது நுழைவுத் தேர்வு (Common–Law Admission Test for Postgraduate – *CLAT PG*)

**ஆசிரியர்களுக்கான குறிப்புகள்**

- மாணவர்களின் ஆர்வத்தைக் கண்டறிந்து அவர்கள் கல்வி என்ற ஏணியில் அடுத்தடுத்த படிகளில் ஏறுவதற்கு உள்ள பல்வேறு வாய்ப்புகளை விளக்கிக் கூற வேண்டும்.
- குடும்பச் சூழல் காரணமாக, பள்ளிப் படிப்பை முடித்தவுடன் வேலைக்குப் போக நேரிடும் மாணவர்களுக்கு, வேலைபார்த்துக் கொண்டே படிக்க முடியும், பார்க்கும் வேலையில் தன் நிலையை உயர்த்திக் கொள்ள உள்ள படிப்புகள் பற்றியும் கூறி உற்சாகப்படுத்த வேண்டும்.
- ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் வாய்ப்புள்ளோர் மேலும், மேலும் படிக்க வேண்டும் என்று நம்பிக்கையூட்ட வேண்டும்.
- மாணவர்களுடன் சேர்ந்து இணைய தளத்திலிருந்து உயர்கல்வியை மேலும், மேலும் தொடர உள்ள வாய்ப்புகளைத் தேடித் தர வேண்டும்

**எதிர்பார்க்கப்படும் விளைவு :**

- படிப்பதற்கான ஆர்வமும் சூழலும் இருப்பவர்கள், உயர்கல்வியில் உள்ள அடுத்தடுத்த நிலைகளை அறிந்து கொள்வார்கள் .
- வேலையில் சேரவும், சேர்ந்த பிறகும்கூட, தொழில் சார்ந்த திறன் வழங்கும் படிப்புகளைப் படித்து வேலைத்தகுதியை உயர்த்திக் கொள்ள முடியும் என்பதைப் புரிந்து கொள்வார்கள் .

## 7. உயர்கல்விப் படிப்பிற்கான மாற்றுவழிகள்

**பயிற்சியின் நோக்கம்** :

- படிப்பைத் தொடர நினைப்பவர்களுக்கு தொலைநிலைக் கல்வி எப்படித் தீர்வாகும் என்பதைப் புரிய வைத்தல்
- அங்கீகரிக்கப்பட்ட தொலைநிலைக் கல்வி பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்துதல்
- தொலைநிலைக் கல்வி, தகுதியையும் திறனையும் மேம்படுத்தப் பயன்படும் என்பதைப் புரிய வைத்தல்

**செயல்படுத்தும் முறை:**

நம்மிடையே பல்வேறு சூழலில் உள்ள மாணவர்கள் இருக்கிறார்கள். குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலை காரணமாக, பள்ளிப்படிப்பை நிறைவு செய்தவுடனேயே கல்லூரிகளில் உயர்கல்வியைத் தொடர முடியாமல் உடனடியாக வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் சிலர் இருக்கலாம். இவர்களின் உயர்கல்வி தாகத்தைத் தீர்த்துக்கொள்ள தொலைநிலைக் கல்வி ஒரு மாற்றுப் பாதையைத் திறந்துவிட்டிருக்கிறது என்று உயர்கல்விப் படிப்பிற்கான தொலைநிலைக் கல்வி பற்றி அறிமுகப்படுத்தி அனைத்து தகவல்களையும் அளித்து நம்பிக்கை ஊட்டவும் .

நம் நாட்டில் இந்திராகாந்தி தேசியத் திறந்தநிலைப் பல்கலைக்கழகம் உள்பட 14 திறந்தநிலைப் பல்கலைக்கழகங்களிலும், நாடு முழுவதும் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் தொலைநிலைக் கல்விப் படிப்புகளைப் படிக்கலாம். 1,600க்கும் அதிகமான படிப்புகளைத் தொலைநிலைக் கல்வி மூலம் படிக்க வாய்ப்புகள் உள்ளன என்று சொல்லவும் .

தொலைநிலைக் கல்வி படிக்க விரும்பும் மாணவர்கள் கீழ்க்கண்டவற்றை பற்றி கவனத்தில் கொள்ள வேண்டும் என்று சொல்லுங்கள்

- எந்தக் கல்வி நிறுவனம் நடத்தும் தொலைநிலை படிப்பாக இருந்தாலும் சரி, அந்தப் படிப்பிற்குத் தொலைநிலைக் கல்விக் குழுமத்தின் அங்கீகாரம் கிடைத்திருக்கிறதா? எனப் பார்க்க வேண்டியது அவசியம்.

- இளநிலைப் பட்டப்படிப்பை முடிக்காமல் நேரடியாக முதுநிலைப் பட்டப்படிப்பைப் படிப்பதோ அல்லது பிளஸ் டூ படிக்காமல் இளநிலை அல்லது முதுநிலைப் படிப்பை படிப்பது அரசு வேலைகளில் சேர உதவாது.
- பத்தாம் வகுப்பை முடித்துவிட்டு +2 படிப்பை முடித்த மாணவர்கள், இளநிலைப் பட்டப்படிப்புகளை முடித்த பிறகுதான் முதுநிலைப் படிப்பைப் படிக்கவேண்டும். அப்போதுதான் அரசு வேலைகளில் சேர முடியும் என்பதை மாணவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.
- தொலைநிலைக் கல்வி மூலம் சில தொழிற்படிப்புகளும் நடத்தப்படுகின்றன. அதுபோன்ற படிப்புகளுக்குச் செய்முறைப் பயிற்சி எந்த அளவுக்கு வழங்கப்படுகிறது? என்பதையும், அதற்காகப் பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் தரமானவையா? என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.
- தற்போது இணையவழிப் (Online) படிப்புகளும் முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளன. ஆனால் அதை வழங்கும் கல்வி நிறுவனத்தின் தரத்தையும், அது அங்கீகரிக்கப்பட்டதா? என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியம்.
- எந்தப் படிப்பிலும் சேர விரும்பாத மாணவர்கள், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் நடத்தும் வேலைவாய்ப்புடன் கூடிய திறன்களைப்பெறும் இலவசப் பயிற்சி வகுப்புகளில் சேரலாம்.

**கல்லூரி மாணவர்களும் டிப்ளமோ படிக்கலாம்!**

பல்கலைக்கழக மானியக் குழு மற்றும் தொலைநிலைக் கல்விக் குழும அறிவிக்கையின்படி, கல்லூரிகளில் சேர்ந்து வழக்கமான பட்டப்படிப்புகளில் சேர்ந்து படிக்கும் மாணவர்கள் அந்தந்தக் காலகட்டத்தில் தொலைநிலைக் கல்வி மூலம் பட்டயப் (Diploma) படிப்பையும் படிக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

**ஆசிரியர்களுக்கான குறிப்புகள்**

- தொலைநிலைக் கல்வி பற்றி மாணவர்கள் மனதில் இருக்கக்கூடிய தவறான எண்ணங்களைப் போக்க வேண்டும்.
- ஒரு வேலையில் அமர்ந்துவிட்டாலும், படிப்பு தாகத்தை விட வேண்டியதில்லை. தொலைநிலைக் கல்வியில் கற்றலைத் தொடரலாம் என்று ஊக்கப்படுத்த வேண்டும்.

- மாணவர்கள் உதவி கோரும்போது, தொலைநிலைக் கல்வியை அளிக்கும் கல்வி நிறுவனங்கள் பற்றிய தகவல்களைத் திரட்ட உதவ வேண்டும்.
- படிப்பிற்கு வயது ஒரு தடையல்ல என்பதைப் புரிய வைக்க வேண்டும்.

**எதிர்பார்க்கப்படும் விளைவு :**

- படிப்பைத் தொடர நினைப்பவர்கள், தொலைநிலைக் கல்வி எப்படித் தீர்வாகும் என்பதைப் புரிந்து கொண்டிருப்பார்கள் .
- தொலைநிலைக் கல்வி, தகுதியையும் திறனையும் மேம்படுத்தப் பயன்படும் என்பதைப் புரிந்து கொள்வார்கள் .

# வேலைவாய்ப்பு வழிகாட்டி

## 1. வேலை உலகைப் புரிந்துகொள்ளுதல்

**பயிற்சியின் நோக்கங்கள்** :

- வேலை சார்ந்த உலகம் செயல்படும் விதத்தை மாணவர்களுக்கு விளக்குதல்
- வேலைக்கு உரிய தகுதியையும் திறமையையும் வளர்த்துக் கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றி தெளிவுபடுத்துதல் .

**செயல்படுத்தும் முறை:**

பள்ளியில் படித்து முடிக்கும் மாணவர்கள், குறிப்பிட்ட வேலையில் சேரவேண்டும் என்ற நோக்கத்துடன் அதற்கான உயர்கல்வியைத் தேர்வு செய்வார்கள். சிலர் தாங்கள் விரும்பிய படிப்புகளில் சேர்ந்து படித்து, பிறகு அந்தப் படிப்புக்கு ஏற்ற வேலையைத் தேடுவார்கள்.

எது எப்படி இருந்தாலும் கல்வித்தகுதி, திறமைகளின் அடிப்படையிலேயே வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதை மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று விளக்க வேண்டும் . தொடர்ச்சியாக கீழ்க்கண்ட தகவல்களையும் பகிர வேண்டும்

**வேலை எங்கு கிடைக்கும்?**

- அரசுத்துறைகள்
- பொதுத்துறை நிறுவனங்கள்
- தனியார் நிறுவனங்கள்
- சுயதொழில்
- இதரப் பணிகள்

**வேலையைத் தேர்வு செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை குறித்து விளக்குங்கள் :**

- விருப்பம், திறமை, ஊதியம், பணிச்சூழல், அடுத்தகட்ட வளர்ச்சிக்கான வாய்ப்பு போன்றவற்றை மனதில்கொண்டு, இந்த வேலை நமக்குப் பொருத்தமானதா? இல்லையா? என்பது குறித்துச் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.

- வேலைக்கு தேவைப்படும் திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

- முதலில் நமக்கு விரும்பிய வேலை கிடைக்காமல் போகலாம். கிடைத்த வேலையைத் தற்போதைக்கு ஏற்றுக்கொண்டு, விரும்பிய வேலைக்கு உரிய தகுதியை வளர்த்துக்கொண்டு, தொடர்ந்து முயற்சி செய்யலாம்.
- வேலையைத் தேர்வு செய்வதில் அறம் சார்ந்த பண்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். தனி மனிதருக்கோ, சமூகத்திற்கோ பாதிப்பு அளிக்கும் எந்த ஒரு பணியையும் தேர்வு செய்யக்கூடாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**ஆசிரியர்களுக்கான குறிப்புகள்**

- வேலைவாய்ப்பு வழங்கும் பல்வேறு நிறுவனங்கள் பற்றி விளக்கிக் கூற வேண்டும்.
- வேலை வாய்ப்பு குறித்த தகவல்களை எப்படியெல்லாம் தேடலாம் என செயல்தாள்களை பயிற்சி செய்ய வைத்து விளக்க வேண்டும்
- வேலை வழங்கும் நிறுவனங்களை எப்படி எல்லாம் தொடர்பு கொள்வது என்பது பற்றி செயல்தாள்களை பயிற்சி செய்ய வைத்து விளக்க வேண்டும்
- எந்த வேலையில் சேருவதாக இருந்தாலும் அந்த வேலைக்கு உரிய தகுதியையும் திறமையையும் வளர்த்துக் கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து மாணவர்கள் புரிந்து கொள்ள உதவ வேண்டும்.
- வேலையில் அறம் சார்ந்த பண்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்

**எதிர்பார்க்கப்படும் விளைவுகள்**

- வேலை சார்ந்த உலகம் செயல்படும் விதம் பற்றி மாணவர்களுக்கு ஓர் அறிமுகம் கிடைத்திருக்கும்
- தான் விரும்பும் வேலைக்கு உரிய தகுதியையும் திறமையையும் வளர்த்துக் கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றி மாணவர்கள் உணர்ந்து கொள்வார்கள் .

# 2. வேலை குறித்த கண்ணோட்டம்

**பயிற்சியின் நோக்கங்கள்:**

- நம்முடைய திறன்கள், குணங்கள் , தேவைகள் இவற்றின் அடிப்படையில் நம் வேலையை தேர்ந்தெடுப்பது எப்படி என்று மாணவர்களை அறிய செய்தல்.
- வேலைக்கு தேவைப்படும் தகுதிகள் , திறன்கள் பற்றி தெளிவுபடுத்துதல்.

**செயல்படுத்தும் முறை:**

உழைக்க தயாராக இருப்பவர்களுக்கு, அவர்களை சுற்றி ஏராளமான வேலைகள் காத்துக் கிடக்கின்றன என்று அமர்வைத் தொடங்குங்கள். பிறகு கீழ்க்கண்ட தகவல்களைப் பகிருங்கள்.

**நாம் செய்யும் வேலைகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்**

- மூளைத்திறன் சார்ந்த வேலைகள்
- உடல்உழைப்பு சார்ந்த வேலைகள்

நமது விருப்பத்திற்கும் படிப்பிற்கும் திறமைக்கும் ஏற்றவகையில் இந்த வேலைகளைத் தேர்வு செய்து கொள்ளலாம்.

**வேலை தேடுபவர்களை மூன்று வகையினராகப் பிரிக்கலாம்.**

- எந்த வேலையாக இருந்தாலும் உழைத்து பிழைத்துக் கொள்வேன் என்பவர்களும் உண்டு.
- இந்த மாதிரியான வேலையைத் தேடுகிறேன்; என் திறமைக்கேற்ற தரமான வேலையைப் பெற்றே தீருவேன் என்று உறுதியோடு செயல்படுபவர்களும் உண்டு.
- நான் ஏன் மற்றவர்களிடம் போய் ஏன் வேலை செய்ய வேண்டும்? சுயமாகத் தொழில் தொடங்கி நடத்தினால், நாமும் வேலை செய்யலாம் . மற்றவர்களுக்கும் வேலை கொடுக்கலாம் என்று நினைப்பவர்களும் இருக்கிறார்கள்.

**எந்த வேலை எனக்கு ஏற்ற வேலை** என்பதை முடிவு செய்ய கீழ்க்கண்ட கேள்விகளை உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள் என்று மாணவர்களை வழி நடத்தலாம் .

**எனக்குப் பிடித்த விஷயங்கள்** : நாம் நம் வேலைப் பற்றியும் மகிழ்ச்சியாக உணர வேண்டுமென்றல், அது நம்முடைய ஒரு பகுதியாகிவிட்ட நமக்கு பிடித்த விஷயங்களின் நீட்சியாக இருந்தால் அதை நாம் விரும்பிச் செய்யலாம்.

- ஒருவருக்கு எல்லோருடனும் பேசப் பிடிக்கும் என்றால், அவர் பலருடன் பேசுகின்ற ஒரு வேலையைத் தேர்ந்தெடுக்கலாம்.
- மணிக்கணக்காக பொறுமையாக ஓரிடத்திலேயே இருந்து வேலைபார்க்க விரும்புபவரா.
- பல இடங்களுக்கும் சென்று வேலை பார்க்க விரும்புபவரா?

1. நமக்கான நல்ல பொழுது போக்கு / இளைப்பாறல் விஷயங்களை தக்க வைக்கும்படியான வேலையை நாம் தேர்ந்தெடுக்க முடியவில்லை என்றால், ஏதோ ஒரு கட்டத்தில் நாம் வேலையைப் பற்றி மன அழுத்தத்தை உணரக்கூடும். இது பற்றியும் யோசிக்க வேண்டும் என்று சொல்லுங்கள் .
2. என்னுடைய திறன்கள் :

தொழில் சார்ந்தவை 1: ஒரு குறிப்பிட்ட வேலையை செய்வதற்கான தொழில் நுட்ப அறிவு ,வேலைக்கு தேவைப்படும் தொழில் சார்ந்த திறன்கள்

வாழ்க்கைத் திறன் சார்ந்தவை 2: நாம் பார்க்கும் தொழில் சார்ந்து, மக்களை கையாள, தொழிலில் வரும் பிரச்சினைகளுக்கு ஈடுகொடுக்க, நம் மன உணர்வுகளை கையாள வாழ்க்கைத் திறன்கள் தேவைப்படுகின்றன.

தொழில் திறனும் வாழ்க்கைத் திறனும் இணையும் போதுதான் வேலையில் நன்கு பிரகாசிக்க முடியும்.

நீங்கள் யார், உங்கள் பண்புகள், திறன்கள், தேவைகள் – இவற்றின் அடிப்படையில் உங்கள் வேலையைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொல்லுங்கள்.

**ஆசிரியர்களுக்கான குறிப்புகள்**

- நாம் ஏற்கனவே SWOC முறைப்படி நம்மை அறிவது பற்றிய முறையை கற்றிருக்கிறோம். நமக்கான வேலையை தேர்ந்தெடுப்பதற்கு இந்த முறையைப் பயன்படுத்தலாம் என்று கூறி, செய்து காட்டி வழி நடத்த வேண்டும்.
- வேலை பற்றிய கண்ணோட்டத்தை விளக்கி தன் தகுதிகளை (பண்பு, திறன், நம் வாழ்வின் தேவை ) – இவற்றை மேம்படுத்திக் கொள்வதன் அவசியத்தை எடுத்துக் கூற வேண்டும்.

**எதிர் பார்க்கப்படும் விளைவுகள்**

- தங்களுடைய திறன்கள், குணங்கள், தேவைகள் இவற்றின் அடிப்படையில் வேலையை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை மாணவர்கள் அறிந்து கொள்வார்கள் .
- வேலைக்கு தேவைப்படும் தகுதிகள், திறன்கள் பற்றியும் தெரிந்து கொள்வார்கள் .

# 3. வேலை சார்ந்த நம்பிக்கைகள்

**பயிற்சியின் நோக்கம்**

- வேலை சார்ந்த நம்பிக்கைகள் எங்கிருந்து வருகின்றன என்பதை மாணவர்களுக்கு விளக்குதல்

**செயல்படுத்தும் முறை:**

- வேலை குறித்த நமது நம்பிக்கைகள் எப்படி உருவாகின்றான என்பதை மாணவர்களுக்கு விளக்க வேண்டும் .
- பெற்றோர், குடும்பம், சமூகத்தின் மூலம் இவை உருவாகின்றான. சில நம்பிக்கைகள் நேர்மறையானவை. சில நம்பிக்கைகள் எதிர்மறையானவை. இவற்றில் எவை சரியானவை என்ற புரிதல் மாணவர்களுக்குத் தேவை என்று சொல்லவும் .
- அனைவருக்கும் சமவாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என்பதை நமது அரசியலமைப்புச் சட்டம் உறுதி செய்துள்ளது. சமூகநீதியும் அதற்கு உத்தரவாதம் அளித்துள்ளது. தகுதியும் திறமையும் இருந்தால், எந்த வேலையிலும் சேரலாம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். சாதி, மதம், இனம், பாலினம் ஆகியவற்றைக் காரணம் காட்டி யாருக்கும் எந்த வேலையையும் மறுத்துவிட முடியாது என்று வலியுறுத்தி சொல்லி அவர்களை ஊக்கப்படுத்துங்கள் .

**ஆசிரியர்களுக்கான குறிப்புகள்**

- தகுதியும் திறமையும் இருந்தால் யாரும் எந்த வேலையிலும சேரலாம் என்பதை மாணவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.
- சாதி, மதம், இனம், பாலினம் போன்றவற்றைக் காரணம் காட்டி யாருக்கும் எந்த வேலையையும் மறுத்துவிட முடியாது என்பதை மாணவர்களுக்கு விளக்கிக் கூற வேண்டும்.

**எதிர் பார்க்கப்படும் விளைவுகள்**

- வேலை சார்ந்த நம்பிக்கைகள் நமக்குள் எப்படி விதைக்கப்படுகின்றன என்பதை மாணவர்கள் தெரிந்து கொள்வார்கள்

# 4. வேலைவாய்ப்புத் தகவல்கள்

**பயிற்சியின் நோக்கங்கள்** :

- வேலைவாய்ப்பு தொடர்பான தகவல்களைச் சேகரிக்கக் கற்றுத் தருதல்
- வேலைவாய்ப்புத் தகவல்களை மதிப்பீடு செய்வதற்குச் சொல்லித் தருதல்

**செயல்படுத்தும் முறை:**

எந்த வேலையில் சேருவதாக இருந்தாலும், அந்த வேலைக்கு உரிய தகுதிகளும் திறமைகளும் தேவை. படிக்கும் காலத்தில் நன்றாகப் படிக்கவேண்டும். உங்களது திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். தகுதிகள் அடிப்படையில்தான் வேலைக்குத் தேர்வு செய்யப்படுவோம் என்பதை மாணவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் .

அரசுத் துறைகளிலும், தனியார் துறைகளிலும் பல்வேறு வேலைவாய்ப்புகள் உள்ளன. அரசுப்பணியில் வேலை செய்வதற்கு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் வேலைக்குத் தேர்வு செய்யப்படுகிறார்கள் என்று சொல்லுங்கள் .

திறமை வாய்ந்த மாணவர்களைத் தங்களது நிறுவனத்திற்கு வளாக நேர்காணல் (Campus Interview) மூலம் பெரிய நிறுவனங்கள் தேர்வு செய்கின்றன.

தனியார் நிறுவனங்களில் வேலைக்கு ஆட்களைத் தேர்வுசெய்வது குறித்த அறிவிப்புகள், பத்திரிகைகளிலும் இணையத்தளத்திலும் வெளியிடப்படுகின்றன. அரசுத்துறை சார்ந்த சில வேலைகளுக்கு, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலை வேண்டிப் பதிவு செய்துள்ளவர்கள், வரிசைப்படி அழைக்கப்படுவார்கள். அதற்காக, வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் தங்களது விவரங்களைப் பதிவுசெய்ய வேண்டியது அவசியம் என்று சொல்லுங்கள்.

**வேலைவாய்ப்புத் தகவல்களை எங்கே பெறலாம் என்பது குறித்த செய்திகளை பகிர்ந்து கொள்ளுங்கள்**

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை , அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், தமிழ்நாடு தனியார் வேலைவாய்ப்பு இணையம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் நடத்தும் இலவசப்பயிற்சி , தொழில் நிறுவனங்களில் உதவித்தொகையுடன் பயிற்சி, ஐஏஎஸ் தேர்வு அரசு இலவசப் பயிற்சி.

**மெய்நிகர் கற்றல் இணையத் தளம்**

பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான பாடக்குறிப்புகளை வழங்கும் தமிழக அரசின் இணைய தளங்கள்

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
- தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம்
- வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம்

**ஆசிரியர்களுக்கான குறிப்புகள்**

- வேலைவாய்ப்புத் தகவல்கள் அடங்கிய வேலைவாய்ப்பு இதழ்களை அறிமுகப்படுத்த வேண்டும்.
- இணையதளம் மூலம் வேலைவாய்ப்புத் தகவல்களைப் பெறுவது குறித்து பயிற்சி அளிக்க வேண்டும்.
- வேலைவாய்ப்புக்கு ஏற்ற திறன்களைப் பெறுவதற்கு பயிற்சி அளிக்கும் நிறுவனங்களை அறிமுகப்படுத்த வேண்டும்.

**எதிர்பார்க்கப்படும் விளைவுகள்**

- வேலைவாய்ப்பு தொடர்பான தகவல்களை எப்படி சேகரிப்பது என்பதை புரிந்து கொள்வார்கள்
- வேலைவாய்ப்புத் தகவல்களை மதிப்பீடு செய்ய வேண்டும் என்பதை உணர்ந்திருப்பார்கள்

# 5. வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான முன்தயாரிப்புகள்

**பயிற்சியின் நோக்கங்கள்** :

- வேலை நாடுபவர்களிடம் தொழில் நிறுவனங்களின் எதிர்பார்ப்பு குறித்த புரிதலை உருவாக்குதல்
- வேலைவாய்ப்பை பெறுவதற்கான முன்தயாரிப்புகள் ( சுய விவரக் குறிப்பு தயாரிப்பது , வளாக நேர்காணலை சிறப்பாக எதிர் கொள்வது) பற்றி விளக்குதல்

**செயல்படுத்தும் முறை:**

வேலைவாய்ப்பைத் தேடுபவர்களுக்கு முதலில் தேவை தன்னம்பிக்கை, தன்னைப் பற்றிய சுயமதிப்பீடு, அடுத்தது விடா முயற்சி. வெற்றிக்குக் குறுக்கு வழிகள் கிடையாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று மாணவர்களிடம் சொல்ல வேண்டும் .

உயர் கல்வி, வேலை வாய்ப்பு வழிகாட்டியின் உதவியுடன் கீழ்க்கண்ட தகவல்களை பற்றி ஆசிரியர்கள் மாணவர்களுக்கு விளக்க வேண்டும் .

- வேலைநாடுபவர்களிடம் தொழில் நிறுவனங்களின் எதிர்பார்ப்பு பற்றி விளக்க வேண்டும்
- தன் விவரக் குறிப்பை எப்படி தயாரிக்க வேண்டும் என்று விளக்குங்கள்
- வளாக நேர்காணலை எதிர்கொள்ளத் தேவைப்படும் செயல்பாடுகளை மாணவர்களுக்கு விளக்குங்கள்

**ஆசிரியர்களுக்கான குறிப்புகள்**

- வேலை பெறுவதற்கு மாணவர்கள் செய்ய வேண்டிய முயற்சிகளை விளக்கிக் கூற வேண்டும்.
- வேலைவாய்ப்பைத் தேடுபவர்களுக்கு முதலில் தேவை தன்னம்பிக்கை என்பதை மாணவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.
- தொழில் நிறுவனங்களின் எதிர்பார்ப்புகளுக்கு, வேலைவாய்ப்புக்கு ஏற்ற தகுதிகளை வளர்த்துக் கொள்ள உதவ வேண்டும்.

**எதிர்பார்க்கப்படும் விளைவுகள்**

- வேலைவாய்ப்பை பெறுவதற்கான முன்தயாரிப்புகள் (சுய விவரக் குறிப்பு தயாரிப்பது, வளாக நேர்காணலை சிறப்பாக எதிர் கொள்வது) பற்றி அறிந்திருப்பார்கள்

# 6. போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகுதல்

**பயிற்சியின் நோக்கங்கள் :**

- வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு போட்டித் தேர்வுகளைப் பற்றிய தகவல்களைப் பகிர்தல் .
- போட்டித் தேர்வுகளுக்கு எப்படித் தயாராக வேண்டும் என்பதைத் தெளிவு படுத்துதல்

**செயல்படுத்தும் முறை:**

- பல்வேறு அரசுத்துறைகளில் பல்வேறு பணிகளுக்குப் போட்டித் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. வேலைக்கு எத்தனை காலி இடங்கள் இருக்கின்றவோ அத்தனை இடங்களுக்கு மட்டுமே தகுதியுடையவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். இந்தத் தேர்வில் ஒவ்வொரு மதிப்பெண்களும் முக்கியமானவை என்று போட்டித் தேர்வுகள் பற்றி மாணவர்களுக்கு விளக்கிச் சொல்லுங்கள்.

உயர்கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டியின் உதவியுடன் கீழ்க்கண்ட தகவல்களை பற்றி மாணவர்களுக்கு ஆசிரியர்கள் விளக்க வேண்டும் .

- போட்டித் தேர்வு எழுதுபவர்கள் கவனிக்க வேண்டியவை
- நேர்முகத் தேர்வை எப்படி எதிர் கொள்வது?

**அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் நடத்தும் அமைப்புகள் பற்றிய விவரங்களையும் பகிர்ந்து கொள்ளுங்கள்**

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் Tamilnadu Public Service Commsission – TNPSC
- தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் Tamilnadu Uniform Services Recruitment Board
- மத்திய அரசுப் பணியாளர் தேர்வு வாரியம் Union Public Service Commission – UPSC
- பணியாளர் தேர்வு ஆணையம் Staff Selection Commission – SSC
- ரயில்வே தேர்வு வாரியம் Railway Recruitment Board
- இந்திய ராணுவம் Indian Army
- இந்தியக் கடற்படை Indian Navy
- இந்திய விமானப்படை India Air Force
- இந்தியக் கடலோரக்காவல் படை Indian Coastal Guard

- மத்திய ரிசர்வ் போலீஸ் படை Central Reserve Police Force
- இந்திய தபால் துறை Indian Postal Department

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுகள் குறித்து விவரங்கள் அறிவதற்கு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலத்தை நேரில் அல்லது 1800 419 0958 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் மூலம் அனைத்து வேலைநாட்களிலும் காலை 10 மணி முதல் 5.45 வரை தொடர்பு கொள்ளலாம் என்ற தகவலை பகிருங்கள் .

**ஆசிரியர்களுக்கான குறிப்புகள்**

- போட்டித் தேர்வுகளின் முக்கியத்துவத்தை மாணவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும் .
- பல்வேறு போட்டித் தேர்வுகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கிக் கூற வேண்டும் . இவை பற்றிய தகவல்களை முன் கூட்டியே அறிந்து வைத்துருக்க வேண்டும் .
- போட்டித் தேர்வுகளை நடத்தும் அமைப்புகள் குறித்து அறிமுகப்படுத்த வேண்டும்.Ð

**எதிர் பார்க்கப்படும் விளைவுகள்**

- வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு போட்டித் தேர்வுகளைப் பற்றிய தகவல்களை பகிர்தல் .
- போட்டித் தேர்வுகளுக்கு எப்படித் தயாராக வேண்டும் என்பதை தெளிவு படுத்துதல்

# 7. நாம் எதிர்க்கொள்ள கூடிய சவால்கள்

**பயிற்சியின் நோக்கங்கள்** :

- வாழ்க்கை பல்வேறு சவால்கள் நிறைந்தது. இதை முன்கூட்டியே தெரிந்துக் கொள்வதன் மூலம் தான் அவற்றை எதிர் கொள்ள முடியும் என்று மாணவர்களுக்கு உணர்த்துதல்.

**செயல்படுத்தும் முறை:**

- உயர்கல்வி, வேலைவாய்ப்புகளை ஒட்டி நாம் பல்வேறு சவால்களை எதிர் கொள்ள நேரிடும். அவை என்னவென்று தெரிந்தால், அவற்றைக் கையாள்வது பற்றி யோசிக்க முடியும் என்று மாணவர்களிடம் பேச ஆரம்பியுங்கள் .
- இவற்றில் சில சவால்கள் அக ரீதியானவை (நம் எண்ணம், மதிப்பீடுகள் சார்ந்தவை )
- சில புற ரீதியானவை என்று சொல்லி அவற்றைப் பற்றி, உயர்கல்வி, வேலை வாய்ப்பு வழிகாட்டியின் உதவியுடன் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு விளக்க வேண்டும் .
- நம்மை நாம் அறிவதுதான் நம் சவால்களை எதிர்கொள்வதற்கான சிறந்த வழி. நம்மை நாம் நம்ப வேண்டும். வாழ்க்கை பற்றிய நோக்கம், எதை சாதிக்க வேண்டும் என்ற பார்வை, இலக்கு – இவை உள்ளவர்களால் தான் வெற்றிப் பாதையில், தடைகளைத் தாண்டி பயணிக்க முடியும் என்று சொல்லுங்கள் .
- இன்றைக்கு நம் கண்முன் இருக்கக்கூடிய சவால்களைவிட, அதிகப்படியான வாய்ப்புகளும் உள்ளன. உயர்கல்வி தொடர்பான அரசின் பல்வேறு திட்டங்கள் உள்ளன . வழிகாட்ட பலரும் உள்ளனர் என்பதையும் சொல்லுங்கள் .

**ஆசிரியர்களுக்கான குறிப்புகள்**

- நம் வாழும் சமூகத்தில் எழுதப்படாத பல சமூக விதிகள் பின்பற்றப்படுகின்றன. இவற்றில் சில சவால்களாக, ஒருவரின் முன்னேற்றதிற்கு முட்டுக் கட்டையாக அமையலாம்.
- சவால்களை விளக்கிச் சொல்லி, அதை கையாள்வது குறித்து மாணவர்களிடம் உரையாட வேண்டும்.

- சவால்கள் குறித்த அவர்களுடைய அவநம்பிக்கையை, **மீண்டு எழுந்து நிற்கக்கூடிய தன்மை மூலம் வென்றெடுக்க** செயல்தாள் மூலம் பயிற்சி அளிக்க வேண்டும்

**எதிர்பார்க்கப்படும் விளைவுகள்**

- வாழ்க்கை பல்வேறு சவால்கள் நிறைந்தது. இதை முன்கூட்டியே தெரிந்து கொள்வதன் மூலம் தான் அவற்றை எதிர்கொள்ள முடியும் என்பதை மாணவர்கள் உணர்ந்திருப்பார்கள் .